# LAPORAN LIPUTAN MEDIA HARIAN
## SABTU 10 DISEMBER 2022

| BIL | TAJUK KERATAN AKHBAR | KEMENTERIAN / JABATAN / AGENSI |
|---|---|---|
| 1. | LOW SUPPLY OF EGGS, 1KG COOKING OIL, SAYS MINISTER, NEWS, MAKKAL OSAI -ONLINE | KEMENTERIAN PERTANIAN DAN KETERJAMINAN MAKANAN (MAFI) |

UKKMAFI

UNIT KOMUNIKASI KORPORAT
KEMENTERIAN PERTANIAN DAN INDUSTRI MAKANAN
(UNTUK EDARAN DALAMAN MAFI, JABATAN DAN AGENSI SAHAJA)

| | | | |
|---|---|---|---|
| Headline | Low supply of eggs, 1kg cooking oil, says minister | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 10 Dec 2022 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 4 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 237 cm² |
| Journalist | N/A | AdValue | RM 1,551 |
| Frequency | Daily | PR Value | RM 4,654 |



# முட்டை, ஒரு கிலோ சமையல் எண்ணெய் குறைவாகவே உள்ளது -அமைச்சர் ஒப்புதல்

புத்ரா ஜெயா, டிச.10-

கோழி முட்டையும் பொட்டலத்தில் அடைக்கப்பட்டுள்ள ஒரு கிலோ சமையல் எண்ணெய்யும் சந்தையில் குறைவாக உள்ளதை உள்நாட்டு வாணிப, வாழ்க்கைச் செலவினத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சலாஹுஃடின் அயோப் கூறினார்.

புத்ரா ஜெயா சுற்றியுள்ள பேரங்காடி, மளிகைக் கடைகளுக்கு திடீர் வருகை வந்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண விவசாய, உணவு உத்தவாரத்துறை அமைச்சிடம்



பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் அவர் சொன்னார்.

பேரங்காடிகளுக்கும் மளிகைக் கடைகளுக்கும் திடீர் வருகை மேற்கொண்டபோது, அங்கு ஏ,பி,சி கிரேட் முட்டைகள் உட்பட பொட்டலத்தில் அடைக்கப்பட்டுள்ள ஒரு கிலோ எடை கொண்ட சமையல் எண்ணெய்யும் குறைவாகக் காணப்பட்டதை தாம் நேரில் கண்டதாக அவர் சொன்னார்.

முந்தைய அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தாலும்கூட, முட்டைக்கும் ஒரு கிலோ சமையல் எண்ணெய்க்கும் கடந்த ஓராண்டு காலமாக பெரும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டில் ஏற்பட்டு வரும் முட்டை பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு காண விவசாய, உணவு உற்பத்தித்துறை அமைச்சு விரைவில் முட்டைக்கான புதிய விலையை அறிவிக்கும் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த திங்கட்கிழமை கூறியிருந்தார்.

எனினும், மறுநாள் அதன் அமைச்சர் முகமட் சாபு, முட்டைக்கான புதிய விலையை அறிவிக்கவில்லை. மாறாக, முட்டை பற்றாக்குறை பிரச்சினைக்குத் தீர்வு காண வெளிநாடுகளிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்படும் என கூறியிருந்தார்.

Powered by: isentia